சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 134/2018**

**நாள் : 01.03.2024**

**PW1: ரேவதி**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :**

1) ஊருக்குள் பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய தம்பிதான் குடியிருக்கிறார். அந்த வீட்டில் நான் பாகம் கேட்கவில்லை. அவர்களே பாகம் கொடுப்பதாக சொல்லியுள்ளார்கள். தாவா சொத்தின் ஒரு பகுதியை திருப்பூரைச் சார்ந்த சுப்பிரமணி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையம் செல்லாது என்று நான் பரிகாரம் கேட்கவில்லை. சுப்பிரமணி, எங்களுக்கு பணம் கொடுத்துவிட்டார். 3-ம் பிரதிவாதி காளியப்பன் பெயரில்தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் சுவாதீனத்தில் இல்லாததால் பட்டா என் பெயரில் இல்லை என்றால் பட்டா என் பெயரில் இல்லை. தற்போது வரை நான் கந்தாயம் கட்டவில்லை. சொத்து விவரத்தில் பொதுவில் 1/8 பாகம் என்று சொல்லியுள்ளேன். ஆனால், அது தவறு. மற்ற 7 பேருக்கும் சொத்தில் பங்கு உள்ளது. மேற்படி 7 பேரும் கூட்டு சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் வேறு தரப்பினர், நாங்கள் வேறு தரப்பினர். அவர்களுக்கும், எங்களுக்கும் எழுத்து பூர்வமாண பாகம் ஏற்படவில்லை. ஆனால், வாய்மொழியாக அவர்கள் தனியாக விவசாயம் செய்கிறார்கள்.

2) வாய்மொழியாக பாகப்பிரிவினை ஆனதாக வழக்கில் சொல்லவில்லை. நான் குறிப்பிட்டுள்ள எல்லா காலை எண்களிலும் 7 பேருக்கும் பாகம் உள்ளது என்றால் பாகம் உள்ளது. 07.10.1998 அன்று தாவா சொத்தில் ஒரு பகுதி கிரையம் ஆனது என்றால் சரிதான். அந்த கிரையம் நடைமுறைக்கு வந்து விட்டது என்றால் சரிதான். 15.11.2006-ல் ஒரு கிரையம் ஆனது என்றால் சரிதான். கிரையம் ஆன விவரம் அப்போதே தெரிந்து கொண்டேன். தாவா சொத்தில் கிணறு, மோட்டார் உள்ளதா என்றால் உள்ளது. கட்டிடங்கள் உள்ளன. கிணறு, மோட்டார் மற்றும் சாலைகள் சொத்து விவரத்தில் காட்டவில்லை என்றால் காட்டவில்லை.

நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும், அனைத்து சொத்துக்களையும் பாகப்பிரிவினைக்கு உட்படுத்தாததாலும், சரியான சொத்து விவரத்தை குறிப்பிடாததாலும் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2024.03.01 16:59:23 +0530

Subordinate Judge,
Avinashi.